**செ.வெ.எண்: 24 / ஜூலை / 2021** **நாள்: 06.07.2021**

# செய்தி வெளியீடு

-----------

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரகத்தில், மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள், மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் ஆகியோரிடம் "இறைவார்த்தை சபை" (SVD- Charitable Institute) அறக்கட்டளையின் சார்பில் திருச்சிராப்பள்ளி பொன்மலைப்பட்டி புதின அர்னால்டு சமூகப் பணி மையம் மற்றும் திருச்சிராப்பள்ளி எழில்நகர் அக்சப்ட் டிரஸ்ட் இணைந்து நடத்திய நிகழ்வில், கத்தோலிக் அருட்தந்தையர்கள் சேவியர் அலங்காரம்(ஜெர்மனி), டி.சேவியர்(ரோம்) சாந்துராஜா (ஹைதராபாத்) ஆகியோர் ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் மதிப்பிலான கொரோனா நிவாரண உதவியாக மருத்துவப் உபகரணங்களை இன்று (06.07.2021) வழங்கினார்கள்.

இந்த மருத்துவ உபகரணங்களில் 4000 முகக் கவசங்கள், 250 பல்ஸ் ஆக்ஸிமீட்டர்கள், 100 ஆக்ஸிஜன் செறிவூட்டிகள் உள்ளிட்ட பல்வேறு மருத்துவ உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்த நிவாரண உதவிகள் எஸ்.வி.டி. ஸ்டெய்லர் கிஷன் (ஜெர்மனி), அர்னால்டு ஜான்சன் ஸ்தாபகம் மற்றும் பி.எம்.இசட். (ஜெர்மனி) ஆகிய நிறுவனங்கள் உதவி ஒத்துழைப்புடன் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.சௌந்தரபாண்டியன், திரு.செ.ஸ்டாலின் குமார், திரு.எஸ்.இனிகோ இருதயராஜ், திரு.சீ.கதிரவன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.என்.சேகரன், முன்னாள் துணை மேயர் மு.அன்பழகன், கி.ஆ.பெ. மருத்துவக்கல்லூரி முதல்வர் டாக்டர் வனிதா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**உதவி இயக்குநர்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**திருச்சிராப்பள்ளி.**